**ஹல்துமுல்ல பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஹல்துமுல்ல பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்குரிய கடன் கொடுத்தோர் தொகை ரூபா 1,060,420 கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்கு சீராக்கப்பட வேண்டும். | 2019 இல் கணக்குகள் தயாரிக்கும் போது நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சீராக்கப்படும். |
| (ii) | மீளாய்வாண்டில் கணக்காய்வுக் கட்டணத்திற்காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கு சீராக்கப்பட வேண்டும். | 2019 இல் கணக்குகள் தயாரிக்கும் போது நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சீராக்கப்படும். |

**(ஆ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 57,559,641 பெறுமதியான காணி மற்றும் கட்டிடம் ரூபா 1,650,854 பெறுமதியான கடன் கொடுத்தோர், நிலையான | கணக்காய்விற்கான சான்றுகள் கணக்குகளுடன் சேர்த்து | 2019 ஆம் ஆண்டில் கணக்குகளை சமர்ப்பிக்கும் போது அனைத்து சான்று களுடனும் கணக்குகளை |

| | | |
|---|---|---|
| சொத்துப் பதிவேடு, பெறுமதி யுடனான உப ஏடு, உறுதி மற்றும் திட்ட வரைபடம், வருடாந்த ஆய்வுப் பெறுமதி என்பனவற்றை சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் கணக்காய்வின் போது திருப்திகரமான முறையில் சான்றுறுதிப் படுத்தப்பட முடியாதிருந்தது. | சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்க முடியும். |

## 1.4 <u>இணங்காமைகள்</u>

**<u>சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை</u>**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | | | |
| (i) 49,52 ஆம் பிரிவுகள் | சபை எல்லைக்குள் நிர்மாணிக்கப்பட்டுள்ள 14 நிர்மாணங்களை அகற்றுவதற்கு அல்லது சட்ட ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்வரும் நிதி ஆண்டில் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். |
| (ii) 127 ஆம் பிரிவு | சபைக்குச் சொந்தமான 38 மயானங்களில் 35 இற்குரிய உறுதி வழங்குவதற்கான கட்டளை மற்றும் அளவை கட்டளை என்பனவற்றைப் பெற்றுக் கொண்டு காணி ஆவணத்தை நாளது வரையறுக்கப்பட்டோ அல்லது மயானங்களின் எல்லைகள் குறிக்கப்பட்டோ இருக்கவில்லை. | சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | 10 மயானங்களின் அளவீடுகள் பெறப்பட்டு அளக்கப்பட்டுள்ளதுடன், எஞ்சிய மயானங்களை அளப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 149 ஆம் பிரிவு | சபை எல்லைக்குள் உள்ள 05 ஹோட்டல்களின் வருடாந்த கிரயத்தில் நூறிற்கு ஒரு சதவீதம் வரை சபையினால் அறவிடப்பட வேண்டியிருந்தாலும் அவ்வாறு அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிரயத்தின் 1% வரை அறவிடப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் சரியான முறையில் நூறிற்கு ஒரு சதவீதம் வருமான வரி கணக்கிட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி 114 | முற்பணம் பெறப்பட்டு அச்செயற்பாடு நிறைவடைந்த பின் உடனடியாக தீர்க்கப்பட வேண்டுமாயினும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் தீர்க்கப்படாத நிலுவை மீதி ரூபா 466,931 ஆகும். | முற்பணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | 1194 ஆம் ஆண்டிலிருந்து இம்மீதி காணப்படுவதுடன் எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |
| (இ) | 1980 திசெம்பர் 31 ஆம் திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | அரச மதிப்பீட்டாளரின் மதிப்பீடு பெற்றுக் கொள்ளாது சபையின் தீர்மானத்திற்கு அமைய மாதாந்த வாடகை அடிப்படையில் கடைகள் வாடகைக்கு விடப்பட்டிருந்தன. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும் | 2018 ஜனவரி 20 ஆம் திகதி மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீட்டறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் அதற்கமைய வாடகை மதிப்பீடு தற்போதைய பெறுமானத்திலும் 3 மடங்கு அதிகம் என்பதனால் புதிய மதிப்பீடொன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,784,399 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,389,311 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப்ப ட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவா று மொத்த நிலுவை | மதிப்பிடப்பட் ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 566,085 | 565,043 | 512,436 | 208,850 | 566,085 | 555,011 | 400,975 | 248,327 |
| (ii) | வாடகை | 587,520 | 588,560 | 382,370 | 783,590 | 587,520 | 586,920 | 463,590 | 699,770 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 73,561 | 77,497 | 53,897 | 128,713 | 73,561 | 77,077 | 42,629 | 154,075 |
| (iv) | ஏனைய வருமானம் | 1,527,100 | 1,466,068 | 1,046,457 | 524,793 | 1,527,100 | 1,512,740 | 1,157,833 | 398,973 |
| | மொத்தம் | 216,000 | 216,000 | 211,000 | 60,500 | 216,000 | 216,000 | 132,000 | 103,579 |
| | | 2,970,266 | 2,913,168 | 2,206,160 | 1,706,446 | 2,970,266 | 2,947,748 | 2,197,027 | 1,604,724 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 2,913,168 தொகையான மொத்த வருமானத்தில் ஆண்டின் இறுதி வரையிலும் ரூபா 1,706,446 தொகை அறவிடப்படாதிருந்ததுடன் அது மொத்த பட்டியலிடப் பட்ட வருமானத்தில் 59 சதவீதம் ஆகும். | நிலுவை வருமானம் உடனடியாக அறவிடப்பட வேண்டும். | தொடர்ந்து காணப்படும் நிலுவையாகக் காணப்படும் ரூபா 430,000 பெறுமதியான கடை வாடகையை அறவிடுவதற்கு வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளதுடன், எஞ்சிய நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாகக் காணப்படும் பெற வேண்டிய கணக்குகளின் மீதி ரூபா 12,196,185 ஆகக் | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | எஞ்சிய ஆண்டுகளில் பெற வேண்டிய வருமானத்தை அறிவிடுவதற்கு |

| | | |
|---|---|---|
| காணப்படுவதுடன், அது மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நீதிமன்றத் தண்டப்பணம்<br>மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 3,500,783 தொகை அறவிடப்பட்டி ருக்கவில்லை. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும். | தற்போது ரூபா 627,726 அறவிடப்பட்டுள்ளதுடன், எஞ்சிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |
| (ஆ) முத்திரைக் கட்டணம்<br>மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 9,253,897 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | தற்போது இந்நிலுவை அறவிடப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலும் 06 விடயங்கள் தொடர்பாக உபவிதிகள் பிறப்பிக்கப்பட்டி ருக்கவில்லை. | உப விதிகள் பிறப்பிக்கப்படாத விடயங்களுக்காக உபவிதிகள் பிறப்பிக்கப்பட வேண்டும். | முச்சக்கர வண்டி நிறுத்துவது தொடர்பான உப விதி தயாரிக்கப்படுகின்றது. |

**(ஆ) <u>நிலைபேறான அபிவிருத்தி இலக்கு</u>**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் ''நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030'' தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், சபைக்குரியதாக முடியமான வகையில் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கு குறிகாட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்கு அடைதலின் முன்னேற்றம் அளவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.2 <u>மனிதவள முகாமைத்துவம்</u>**

**<u>பதவியணி வெற்றிடம்</u>**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 பதவிகளுக்குரிய மிகை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | பதவியணியினர் அங்கீகரிக்கப்பட வேண்டும் | மிகை பதவிகள் பதவியணியினரை உள்வாங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 பதவிகளுக்குரியதாக காணப்பட்ட 08 வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. | பதவியணி அங்கீகரிக்கப்பட வேண்டும் | வெற்றிடமாகவுள்ள பதவியணியினரை நிரப்புவதற்கு உள்ளூராட்சிமன்ற ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | பதவியிலிருந்து விலகிய ஒரு உத்தியோகத்தரிடம் இருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய ரூபா 26,920 கடன் மீதி அறவிடப்பட்டிருக்க வில்லை. | தாபன விதிக்கோவையின் கட்டளைகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | உரிய தரப்பினருக்கு கடிதம் மூலம் பல தடவைகள் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | --------------------------------------- | ------------------------ | ---------------------------- |
| (அ) | முச்சக்கர வண்டிகளுக்குரிய வருடாந்த அனுமதிப்பத்திர கட்டணத்தை அறவிடுவதற்கு உப விதி பிறப்பிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்க வில்லை. தீர்மானத்திற்கு அமைய முச்சக்கர வண்டி நிறுத்துவதற்காக வருடாந்த அனுமதிப் பத்திரத்திற்காக ரூபா 600 அறவிடப்பட வேண்டும் எனினும், பிரதேச சபையில் பதிவு செய்யப்பட்ட 97 முச்சக்கர வண்டிகளுக்காக கட்டணம் அறவிடப்படாதிருந்த காரணத்தினால் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு சபைக்கு ரூபா 69,000 பெறுமதியான வருமானம் கிடைக்கப் பெறாதிருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும் | 97 முச்சக்கர வண்டிகளுள் 61 இற்கான நிதி தற்போது அறவிடப்பட்டுள்ளதுடன், எஞ்சிய 26 முச்சக்கர வண்டிகளுக்குமான நிதி அறவிடப்படுகின்றது. |
| (ஆ) | ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக காணப்படும் கடன் கொடுத்தோர் தொகை ரூபா 12,260,251 ஆன தொகை மீளாய்வாண்டின் போதும் மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்தப் பணம் மீளளிப்புச் செய்யப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் நிதி ஏற்பாடுகளை மேற்கொண்டு இப்பணத்தை மீளளிப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### செயலற்ற சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| --------------------------------------- | ------------------------ | ---------------------------- |
| ரூபா 6,705,669 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த வியாபார நிலையத்தைப் பயன்படுத்துவதற்கு பாதை ஒன்று காணப்படாத காரணத்தினால் வியாபார நிலையத்தைப் பயன்படுத்தாது செயலற்றுக் கிடந்தது. | செயலற்ற சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | கடைகளுக்குச் செல்வதற்கான பாதையை அமைப்பதற்கு தேவையான நிதி ஏற்பாட்டை வழங்குமாறு பல்வேறு |

| | | |
|---|---|---|
| | | அரச அமைச்சுக்களிடம் வேண்டுகோள் விடுத்தாலும் இது வரை சரியான பதிலேதும் கிடைக்கவில்லை. |

## 4. <u>கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்</u>

### 4.1 <u>கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு</u>

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(01) ஆம் இலக்க உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டி தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் காலாண்டிற்கு ஒரு முறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நடாத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஆலோசணையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் காலாண்டிற்கு ஒருமுறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |